## பிறப்பு

1. வெளிநாட்டில் பிறந்ததற்கான அறிக்கை

நீங்கள் ஓர் ஐக்கிய அமெரிக்கப் பெற்றோராயின், உங்களுடைய குழந்தை வெளிநாடுகளில் பிறந்திருப்பின், பிள்ளையின் ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமைக்கு உரிமை கோருவதற்கான உத்தியோகபூர்வமான பதிவொன்றினை நிரூபிப்பதற்காக சாத்தியமாயின் பிள்ளை பிறந்தபோது உடனடியாகவே ஐக்கிய அமெரிக்காவிற்கான தூதரகத்திற்கு அறிவிக்க வேண்டும். இந்த உத்தியோகபூர்வ அறிக்கை என்பது வெளிநாட்டுப் பிறப்பின் தூதரக அறிக்கையாக அமெரிக்கப் பிரஜாவுரிமைக்கான அடிப்படை ஆவணமாக உள்ள FS-240 என்ற படிவம் ஆகும்.

வெளிநாட்டுப் பிறப்பு தூதரக அறிக்கை (CRBA)

வெளிநாட்டுப் பிறப்பு தூதரக அறிக்கை (CRBA) குடிவரவு மற்றும் தேசியச்சட்டத்தின் கீழ் குடியுரிமை மாற்றத்திற்கான தேவைகளை எதிர்கொள்ளும் அமெரிக்கப் பெற்றோர்கள் / பெற்றோர் ஒருவருக்கு வெளிநாட்டில் பிறந்த குழந்தைக்கு வழங்கப்படுகின்ற அமெரிக்கப் பிரஜைக்கான ஆதாரமாக உள்ளது. குழந்தையின் 18 ஆவது பிறந்த தினத்திற்கு முன்னர் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படவேண்டும். குழந்தை பிறந்தவுடன் பெற்றோர்கள் உடனடியாகவே இதற்காக விண்ணப்பிப்பதனை நாம் பரிந்துரை செய்கின்றேம். ஒரு CRBA ஒருபோதும் வழங்கப்பட்டிருக்காத 18 வயதிற்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான அமெரிக்கப் பிரஜாவுரிமைக்கு சாத்தியமாயின் தயவுசெய்து மூல உரிமை கோரலைப் பார்க்கவும். அமெரிக்கப் பிரஜாவுரிமைக்கு உரிமை கோரும் எவரேனும் ஒருவர் அவர்கள் வேறுநாட்டின் பிரஜாவுரிமையைப் பெற்றிருந்தலும் கூட ஐக்கிய அமெரிக்காவிற்குள் உள்நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் செல்லுபடியான கடவுச்சீட்டினை வைத்திருக்க வேண்டும்.

2. வெளிநாட்டுப் பிறப்பு தூதரக அறிக்கையினை வழங்குதல்

வெளிநாட்டுப் பிறப்பு தூதரக அறிக்கை என்பது, ஐக்கிய அமெரிக்காவிற்கு வெளியே பிற்நத ஒரு குழந்தைக்கான ஐக்கிய அமெரிக்க பிரஜாவுரிமையினை நிரூபிப்பதற்குரிய அடிப்படை ஆவணமாகும். அமெரிக்கப் பிரஜாவுரிமைப் பெற்றோருக்கு வெளிநாட்டில்

பிறந்த குழந்தைக்குரிய பிரஜாவுரிமையானது பின்வரும் சந்தர்ப்ப சூழ்நிலைகளினதும் நிபந்தனைகளினதும் கீழ் மாற்றப்படலாம்.

**ஐக்கிய அமெரிக்கப பிரஜாவுரிமை உடைய பெற்றோருக்கு திருமணத்தின் மூலம் வெளிநாட்டில் பிறந்த குழந்தை:** அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்ற இரு பெற்றோர்களுக்கு வெளிநாட்டில் பிறந்த குழந்தையானது தேசிய மற்றும் குடிவரவுச்சட்டத்தின் 301(c) என்ற பிரிவின் கீழ் பிறப்பின்போது ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமையினைக் கோரலாம். குழந்தை பிறப்பதற்கு முன்னர் பெற்றோர்களில் ஒருவர் ஐக்கிய அமெரிக்காவில் வசித்து இருக்க வேண்டும். அதற்கான குடியிருப்புக் காலம் பற்றி இங்கு எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**ஐக்கிய அமெரிக்கப் பிரஜை ஒருவருக்கும் அந்நிய நாட்டுப் பிரஜை ஒருவருக்கும் திருமணத்தின் மூலம் வெளிநாட்டில் பிறந்த குழந்தை:** ஐக்கிய அமெரிக்கப் பிரஜை ஒருவருக்கும் அந்நிய நாட்டுப் பிரஜை ஒருவருக்கும் திருமணத்தின் மூலம் வெளிநாட்டில் பிறந்த குழந்தையானது 301 (g) INA என்ற பிரிவின் கீழ் குழந்தை பிறந்தபோது உரிய சட்டத்தின் மூலம் தேவைப்படும் காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் உடல்ரீதியான தங்கியிருப்பு நிலையில் வசித்துக் கொண்டிருந்த பெற்றோருக்கு வழங்கப்பட்ட பிரஜாவுரிமைக்கு அந்தக் குழந்தையானது உரித்துடையதாகின்றது. குழந்தைக்கான ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமையினை மாற்றுவதற்கு உடல் ரீதியான தங்கியிருப்பு நிலைக்காக 1986 நவம்பர் 14 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த காலத்தில் உடல் ரீதியான தங்கியிருப்பு நிலையில் ஐந்து வருடங்களாக 14 வயதினை அடைந்த பின்னர் ஆகக்குறைந்தது 2 வருடங்களாக வசித்துக் கொண்டிருந்தல் அவசியமானது. 1952 டிசம்பர் 24 ஆம் திகதி தொடக்கம் 1986 நவம்பர் 13 ஆம் திகதி வரைக்குமிடையில் பிறப்பு நிகழ்ந்திருக்குமாயின், உடல்ரீதியான தங்கியிருப்பு நிலையில் 10 வருடங்களாக 14 வயதினை அடைந்த பின்னா ஆகக்குறைந்தது 5 வருடங்களாக வசித்துக் கொண்டிருத்தல் அவசியமானது.

**திருமணமாகாத ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்ற தந்தைக்குப் பிறந்த குழந்தை:** திருமணமாகாத ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்ற தந்தை ஒருவருக்குப் பிறந்த குழந்தையானது 301 (g) INA என்ற பிரிவின் கீழ், வழங்கப்பட்டுள்ள 309 (a) INA என்ற பிரிவின் மூலம் உள்ளபடி தனது பிரஜாவுரிமைக்கு உரிமை கோரலாம்.

1. தெளிவு மற்றும் உறுதியான சான்று மூலம் நிரூபிக்கப்பட்ட தந்தைக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையிலான இரத்த உறவு.
2. விண்ணப்பதாரியின் பிறப்பின்போது ஐக்கிய அமெரிக்காவின் தேசியததை தந்தை கொண்டிருத்தல்.
3. தந்தை (இறக்காத வரை) விண்ணப்பதாரி 18 வயதினைப் பூர்த்தி செய்யும் வரைக்கும் அந்த நபருக்கான நிதிசார் ஆதரவினை வழங்குவதற்கு எழுத்து மூலம் சம்மதித்திருந்தமை.
4. 18 வயதிற்குக் குறைவான நபரின் போது,
    - விண்ணப்பதாரரின் வசிப்பிடம் அல்லது வழக்கமாக வாழுமிடத்தின் சட்டத்தின் கீழ் நியாய முறையாக்கப்பட்டமை.
    - சத்தியப் பிரமாணத்தின் கீழ் எழுத்து மூலம் நபரின் தந்தைநிலையைத் தந்தை ஒப்புக்கொள்ளுதல் அல்லது,
    - விண்ணப்பதாரியின் தந்தைக்கான அந்தஸ்து நிலைமையானது நியாய விசாரணைத் தீர்ப்பு மன்றத்தின மூலம் நிரூபிக்கப்பட வேண்டும்.

**திருமணமாகாத ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்றிருக்கும் தாய் ஒருவருக்குப் பிறந்த குழந்தை :**

திருமணமாகாத ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்ற தாய் ஒருவருக்குப் பிறந்த குழந்தையானது 301 (g) INA என்ற பிரிவின் கீழ், வழங்கப்பட்டுள்ள 309 (a) INA என்ற பிரிவின் மூலம் உள்ளபடி தனது பிரஜாவுரிமைக்கு உரிமை கோரலாம். குழந்தை பிறந்தபோது தாயானவர் ஐக்கிய அமெரிக்கப் பிரஜையாக இருந்திருந்தால் மற்றும் தாய் முன்பு உடல்ரீதியான தங்கியிருப்பு நிலையில் ஐக்கிய அமெரிக்காவில் அல்லது அதன் புறநகர் குயேற்றங்களில் ஒரு வருட காலம் தொடர்ச்சியாக வசித்திப்பவராயின் அவருக்குரிய பிரஜாவுரிமை அப்பிள்ளைக்கும் உரித்துடையதாகின்றது.

**வெளிநாட்டுப் பிறப்பிற்கான தூதரக அறிக்கைக்காக ஒரு முறைசார் விண்ணப்பத்திற்கு தேவைப்படும் விண்ணப்பம் (PDF 52.3KB) பணமாகச் செலுத்தப்படும் கட்டணமும் பின்வரும் ஆவணங்களும் தேவைப்படுகின்றன :**

1. குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் மூலப்பிரதி மற்றும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட ஒரு மொழிபெயர்ப்பாளரினால் மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கிலத்தின் மொழிபெயர்ப்பு.

2. பெற்றோரின் திருமணச் சான்றிதழ் மற்றும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட ஒரு மொழிபெயர்ப்பாளரினால் மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கிலத்தின் மொழிபெயர்ப்பு.
3. முன்னைய திருமணங்களின் நிறுத்தத்திற்கான சான்றுகள் (முன்பு திருமணமாயின்),
4. பெற்றோரின் கடவுச்சீட்டுகள்.
5. வைத்தியாசாலை சிகிச்சை அட்டை, பிரசவித்த அறிக்ககை, கர்ப்பகால அறிக்கைகள், குழந்தை நோயியல் வைத்தியரின் அறிக்கை மற்றும் ஏனைய வைத்தியசாலை அறிக்கைகள்.
6. பெற்றோர்களில் ஒருவர் ஐக்கிய அமெரிக்கப் பிரஜையாயின் - உடல் ரீதியான தங்கியிருப்பு நிலையில் ஐந்து வருடங்களாக 14 வயதினை அடைந்த பின்னர் ஆகக்குறைந்தது 2 வருடங்களாக வசித்துக் கொண்டிருந்தமையை நிரூபிப்பதற்கான பதிவுகள். கல்விசார் பதிவுகளையும் கடவுச்சீட்டிற்கான உள்நுழைவு மற்றும் வெளியேற்றம் என்பவற்றிக்கான இறப்பர் முத்திரைகள் வரையறுப்பது அவசியமில்லை ஆயினும் இங்கு ஆதராங்களாக அமையலாம்.
7. இரண்டு பெற்றோரும் ஐக்கிய அமெரிக்கப் பிரஜையாயின், ஆகக்குறைந்தது பெற்றோரில் ஒருவராவது ஐக்கிய அமெரிக்காவில் வசித்திருந்தமை பற்றிய ஆதாரத்தை நிரூபிக்க வேண்டும். குழந்தை பிறப்பதற்கு முன்னர் உரிய நேரத்தில் சில புள்ளிகள் என்பவற்றை இந்த ஆதாரமானது உள்ளடக்கலாம். ஆதாரங்களாக உள்ளடங்கலாம். ஆனால் பயன்பாட்டு மற்றும் அடகுக் (ஈட்டு) கட்டணங்களை ஆறு மாதத்திற்கும் மேலாகச் செலுத்தத் தொடங்குவதற்குக் கட்டுப்படத் தேவையில்லை.

பெற்றோர் தமது குழந்தைக்கு ஐக்கிய அமெரிக்க பிரயாணக் கடவுச்சீட்டினையும் சமூகப் பாதுகாப்பு இலக்கத்தனையும் (PDF 122KB) (வெளி இணைப்பு) உரிய நேரத்தில் விண்ணப்பிபபத்றகு ஊக்கப்டுத்தப்படுகின்றார்கள். பெற்றோரின் உடல்ரீதியான தங்கியிருப்பு நிலைக்கான போதாமை காரணமாக, உங்களின் குழந்தையானது ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமைக்குத் தகுதியில்லையாயின், பெற்றோர் ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்வற்கு முன்னர் குழந்தை பிறந்திருப்பின், அக்குழந்தை ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு இது வரைக்கும் 2000 ஆம் ஆண்டின் குழந்தைக்கான பிரஜாவுரிமைச்சட்டம் (Child Citizenship Act of 2000) அல்லது குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட குடியேற்றம் (Family Based Immigration) என்பவற்றின் கீழ் தகுதியுடையவராக இருக்கலாம். விண்ணப்பித்தற்கான நியமனத்தைத் திட்டமிடவும்.

3.ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமையின் மாற்றம்

ஐக்கிய அமெரிக்கப் பிரஜாவுரிமையின் மாற்றம் பின்வருவனவற்றை ஆதாரமாகக் கொண்டுள்ளது :

1. குழந்தை பிறந்த நேரத்தில் ஆகக்குறைந்தது ஒரு பெற்றோராவது தமது ஐக்கிய அமெரிக்கத் தேசியத்தை வைத்திருத்தல்.
2. குழந்தைக்கும் ஐக்கிய அமெரிக்கப் பெற்றோருக்குமான இரத்த உறவுநிலையின் இருப்பு.
3. குழந்தை பிறப்பதற்கு முன்னர் ஐக்கிய அமெரிக்காவில் இருக்கும் அமெரிக்கப் பெற்றோர்களைப் பரிசோதித்த ஆவணச்சான்று.

**எடுத்துக்காட்டான ஆவணங்கள்:**

சில ஆவணங்களின் எடுத்துக்காட்டுக்கள் பரிசோதிப்பதற்கு கருதப்படக்கூடிய ஆதாரங்களாக உள்ளன. உடல்ரீதியான தங்கியிருப்பு நிலையின் தேவையானது உள்ளடக்கப்படலாம் (ஆனால் வரையறுக்கப்படவில்லை).

- கூலி மற்றும் வரி அறிக்கைகள் (W -2)
- கல்விசார் எழுத்து ஆவணங்கள்
- தொழில்சார் பதிவுகள்
- வாடகை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுகள்
- கௌரவமுள்ள ஐக்கிய அமெரிக்க இராணுவ சேவைப் பதிவுகள், ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்துடனான தொழில்கள் அல்லது குறிப்பிடத்தக்க உள்நாட்டு அரசாங்க சர்வதேச நிறுவனங்கள் அல்லது சுயமாக, திருமணமாகாத, பிள்ளையும் தாயும் வாழும் விட்டுச்சூழல் சேவைகள், தொழில்கள் (இங்கே குறிப்பிடப்பட்டதைத் தவிர)
- ஐக்கிய அமெரிக்கப் பிரயாணக் கடவுச்சீட்டு முத்திரை சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படலாம். ஆனால் அது சான்றாதாரத்தின் அடிப்பாகமாகக் கருதப்படமாட்டாது. சாரதிகள் அனுமதிப் பத்திரமானது உடல்ரீதியான இருப்புநிலையின் ஆதாரமாக அமையாது.
- வெளிநாட்டுப் பிறப்புத் தூதரக அறிக்கையுடன் வழங்கப்பட்டிருக்கும் வேறு பிள்ளைகள் உங்களுக்கு இருப்பின், அவை ஒரு துணை ஆதாரமாகக்

கருதப்படலாம். தயவு செய்து துணை ஆதாரங்கள் தொடர்பான முக்கியமான தகவல்களை வாசிக்கவும்.